# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.18 /2021

பி.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 22–07–2025.

பெயர் = ராதாகிருஷ்ணன் பி.சா.–1

பி.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் கு.வி.–

(1) நான் பிறப்பதற்கு முன்பாகவே என் பெற்றோர் திருநெல்வேலியில் குடியேறிவிட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் திருநெல்வேலியில் குடியேறி 50 வருடங்கள் இருக்கும். நாங்கள் திருநெல்வேலியில் குடியேறியபிறகு தாவா சொத்திற்கு வருவதில்லை என்றால் சரியல்ல. எனக்கு தற்போது 62 வயது ஆகிறது. என்னை விட பிரதிவாதி 6 வயது மூத்தவர் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்துப்பார்த்தேனா என்றால் ஆமாம். பிரதிவாதியின் அப்பா ஆழவந்த ரெட்டியார் என்றால் சரிதான். என் தகப்பனார் சின்னச்சாமியின் உடன்பிறந்தவர்கள் 6 பேர்கள். பெண்கள் 2 பேர். ஆண்கள் 4 பேர். பிரதிவாதியின் தாயார் கணபதியம்மாள் என் அப்பாவுடன் பிறந்தவர் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு அத்தை மகன். என் அத்தை பெயர் தனவதியம்மாள். பிரதிவாதியின் தாயாரும், என் தகப்பனாரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். ஆழவந்த ரெட்டியாரிடமிருந்து பிரதிவாதி 1976ம் வருடம் தாவாச்சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை பிரதிவாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சின்னச்சாமி ரெட்டியார் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.3ல் பிரதிவாதியின் பெயர் உள்ளது என்றால் சரிதான். அதற்காகத்தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியின் பெயருக்கு பட்டா மாற்றம் ஏற்பட்டு 30 ஆண்டுகள் இருக்குமா என்றால் இல்லை 15 ஆண்டுகள் இருக்கும். 15 வருடங்களாக பட்டாவை ரத்து செய்ய வருவாய்த்துறையில் நான் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

(2) தாவாச்சொத்து பிரதிவாதியின் தந்தை ஆழவந்தார் ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டு அவரிடமிருந்து 23.05.1976 பிரதிவாதி கிரையம் பெற்று தற்போது வரை தாவாச்சொத்தை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை நான் அனுபவம் செய்துவருவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 'A' Register தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் அனுபவம் செய்து வருவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை அனுபவம் செய்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் உடன்பிறந்தவர்கள் 4 பேர். பிரேமா, துவாரகநாத், ராமகிருஷ்ணன், சுப்புலட்சுமி. மொத்தம் 5 பேர். எனக்கும் என் சகோதரர்கள் ராமகிருஷ்ணன், துவாரகநாத் ஆகியோர்க்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கும் எனக்கும் சிவில் வழக்கு உள்ளது. வா.சா.ஆ.1 ல் பிரதிவாதி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 வழக்கிற்கு சம்பந்தப்பட்டதல்ல என்பதால் மேற்படி ஆவணம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தீர்ப்பாணை நகலை நான் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தீர்ப்புரையிலேயே சொத்து விவரங்கள் உள்ளது என சாட்சி கூறுகிறார். சொத்து விவரம் தெரிந்துவிடும் என்பதற்காகத்தான் நான் தீர்ப்பாணையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(3) தாவாச்சொத்தின் சர்வே எண்.268/11 ஆகும். வா.சா.ஆ.2 பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன் படி சி செட்யூல் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் உள்ள சொத்துக்கள் தவிர என் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் கிடையாது என்றால் என் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளன. வா.சா.ஆ.2 ல் உள்ள சொத்துக்கள் தவிர என் தந்தைக்கு வேறு பூர்வீக சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ–2 சி செட்யூல் சொத்தில் தாவாச்சொத்து உள்ளதா என்றால் இல்லை. தாவாச்சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் வா.சா.ஆ.2 ல் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஒத்திப்பத்திரத்தை வைத்து தாவாச்சொத்தை உரிமைகோர முடியாது என்றாலும், வா.சா.ஆ.4 ஆவணம் உரிமைமூலத்தை நிர்ணயம் செய்யக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல. தாவாச்சொத்தை பிரதிவாதி கிரையம் பெறுவதற்கு முன்பாக அவரது தந்தையும், கிரையம் பெற்ற பிறகு பிரதிவாதியும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1,2 குறித்து பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1,2 ஆவணத்திற்கும் தாவாச்சொத்திற்கும்

எந்த தொடர்பும் கிடையாது குழப்பத்தை ஏற்படுத்த நான் அதனை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், என் மூதாதையரோ தாவாச்சொத்தை அனுபவம் செய்தது கிடையாது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 48 ஆண்டுகளுக்கு மேலாக பிரதிவாதி தான் தாவாச்சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் அவருடைய அனுபவத்தை எப்போதும் இடைஞ்சல் செய்ததும், ஆட்சேபணை செய்ததும் கிடையாது என்றால் சரியல்ல. என் உடன்பிறந்தவர்கள் வழக்கிற்கு அவசியத்தரப்பினர்கள் என்பதால் அவர்களை சேர்க்காததால் வழக்கு அவசியத்தரப்பினர்களை சேர்க்காத தோசத்திற்குள்ளாகியுள்ளது என்றால் சரியல்ல. ஜீன் 1995ம் வாக்கில் பாகப்பிரிவினை செய்ததாக சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை, வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.07.22 17:10:06 +0530